---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மொனறாகல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்து ஏற்படும் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொனறாகல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றம் காசுப் பாய்ச்சல் கூற்று உள்ளூராட்சி மன்றங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்**

---

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆசிய அபிவிருத்தி வங்கியின் நகர்ப்புற அபிவிருத்திப் பிரிவின் செயற்றிட்டத்தால் வழங்கப்பட்ட கடனில், ரூ. 67,560,633 செலுத்த வேண்டியிருந்த போதிலும் நிதி நிலை தொடர்பான கூற்றில் அது ரூ. 2,552,912 ஆக, ரூ. 65,007,721 குறைவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | கடன் நிலுவையை சரிபார்க்குமாறு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை பதில் வழங்கப்பட வில்லை. | சரியான பெறுமதி நிதிக் கூற்றுகளில் பதிவு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | இதர வைப்புப் பதிவேட்டில் சேர்க்கப்பட்டிருந்த ரூ. 3,827,500 வைப்புத் தொகை மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் வருமானத்தில் சேர்க்கப்பட்டிருந்த போதிலும் நிதி நிலை அறிக்கையில் வைப்பு இருப்பின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது | இந்த கணக்கீட்டுப் பிழைகளை சீர் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | சரியாக நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதி நாளில் நடைமுறைக் கணக்கு மீதி ரூபா. 9,652,717 என்ற போதிலும் நிதி நிலை அறிக்கையில் அது ரூ. 11,363,337 ஆக, ரூபா. 1,710,620 மேலதிகமாக குறிப்பிடப்பட்டிருந்தது. | இந்த கணக்கீட்டுப் பிழைகளை சீர் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | பெறுமதி சரியான முறையில் நிதிக் கூற்றுகளில் பதிவு செய்யப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் (LDSP) கீழ் சபையால் நிர்மாணிக்கப்பட்ட குமாரதொல வீதி வாகன நிறுத்துமிடத்தின் பெறுமதியான ரூபா 10,074,653 நிலம் மற்றும் கட்டிடக் கணக்கில் இரண்டு முறை வரவு வைக்கப்பட்டிருந்தது . | இந்த கணக்கீட்டுப் பிழைகளை சீர் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | சரியாக நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (உ) | நீர் கட்டண பதிவேட்டின்படி, 2023 திசெம்பர் 31 அன்று பெறப்பட வேண்டிய நிலுவையில் உள்ள நீர் கட்டணம் ரூபா. 989,800 ஆகும். எனினும் அது ரூபா. 1,547,300 எனக் குறிப்பிடப்பட்டிருந்தமை காரணமாக இரு நிலுவைகளுக்கு இடையே ரூபா. 557,500 வித்தியாசம் காணப்பட்டது. | நீர் கட்டணத்தை பட்டியலிடும் போது ஏற்பட்ட பிழைகள் மற்றும் நிலுவைகளை தள்ளுபடி செய்ய அனுமதிகோரி அனுப்பப்பட்ட பெறுமதிகளை ஆவணங்களிலிருந்து நீக்கியதால் ஏற்பட்ட நிலைமை | கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் ஆவணங்களை ஒப்பீடு செய்ய வேண்டும் |
| (ஊ) | மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் சபைக்கு நன்கொடையாகக் கிடைக்கப் பெற்ற கணினி இயந்திரம் மற்றும் பிளாஸ்டிக் தண்ணீர் தொட்டி ஆகியவற்றின் மதிப்பு மதிப்பிடப்பட்டு கணக்கில் உள்ளடக்கப்படவில்லை. | மதிப்பிடப்பட்ட பெறுமானம் பெறப்பட்டு கணக்கில் பதிவு செய்யும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன | சபைக்குக் கிடைக்கப் பெறும் அனைத்து சொத்துக்களினதும் பெறுமதி கண்டறியப்பட்டு கணக்கில் உள்ளடகப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டில் நிறைவு செய்யப்பட்ட பணிகள் ரூபா. 30,411,233 பெறுமதியான பேருந்து நிலைய சுகாதார வசதிகள் தொகுதியின் பெறுமதி காணி மற்றும் கட்டிடங்கள் கணக்கில் ரூபா. 29,610,709 என ரூபா. 800,524 குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது. | கணக்கீட்டுப் பிழைகளை சீர் செய்வதற்கான நடவடிக்கைகள் இப்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ளன. | சரியாக நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டும் |

### 1.6.2 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ரூபா 2,097,059,444 கூட்டுப்பெறுமதியான 03 சொத்து விடயங்கள் தொடர்பாக உரிமைப் பத்திரம், தொழில்சார் மதிப்பீட்டாளரின் அறிக்கைகள் நிலையான சொத்துக்கள் பதிவேடு, அட்டவணைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தும் கடிதங்களை சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | காணிகள் மதிப்பீடு செய்யப்பட்டு சீர் செய்யப்பட்டதன் பின்னர் உரித்துப் பத்திரத்தைத் தயார் செய்வதற்கும், தொழில்சார் மதிப்பீட்டாளரின் அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்குமான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை இற்றைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் குறிப்பிட்டுக் காட்டுகிறேன் | நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்ட கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றம் முகாமைத்துவ தீர்மானங்ளுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| பிரிவு 24(1) (அ) | சபையினால் பேணிச் செல்லப்படும் வீதிப் பதிவேட்டில் 481 வீதிகள் உள்ளடக்கப்பட்டிருந்தாலும் 454 வீதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை | நிதி கிடைக்கப் பெற்றவுடன் வீதிகளை அளவீடு செய்து வரைகடமாக்கி வர்த்தமானியில் பிரசுரிப்பதாக உறுதியளிக்கிறேன் | வீதிப் பதிவேட்டினை இற்றைப்படுத்தி வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டும். |
| (ஆ) 2010 ஆகஸ்ட் 17 ஆம் திகதிய மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கை | வீதி விளக்குகள் பதிவேட்டின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் 3116 வீதிவிளக்குகள் பொருத்தப்பட்டிருந்த போதும் வீதிவிளக்கு வெளிச்சமூட்டுதல் தொடர்பாக இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | மின்சார சபையுடன் உடன்படிக்கை செய்யாமைக்கு பல காரணங்கள் காணப்படும் நிலையில் எதிர்காலத்தில் இவ் விடயம் தொடர்பில் மேலும் அவதானம் செலுத்துவேன் எனக் குறிப்பிடுகிறேன் . | சுற்றறிக்கைப் பிரகாரம் செயற்பட வேண்டும் |
| இ 2009 ஏப்ரல் 17 ம் திகதியுடைய 1597/8 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி | 2016ஆம் ஆண்டு முதல் 2020ஆம் ஆண்டு வரை அங்கீகரிக்கப்பட்டுள்ள 448 கட்டிட விண்ணப்பங்களில் 380 கட்டிட விண்ணப்பங்கள் ஆய்வு செய்யப்பட்டு இணக்கச் சான்றிதழ் வழங்கப்படவில்லை. | எதிர்காலத்தில் கட்டுமானம் தொடர்பாக போதுமான கண்கானிப்பு ஏற்படுத்தப்படும் என உறுதியளிக்கிறேன் | பரிபாலனப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் கட்டுமானங்கள் தொடர்பில் கண்கானிக்கப்பட வேண்டும். |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,465,208ஆக இருந்ததுடன் அதனேடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,924,624 ஆக காணப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையின் செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரியும் வரியும் | 14,123,230 | 13,710,743 | 16,106,287 | 17,314,706 | 3,045,000 | 13,586,447 | 13,586,448 | 19,851,963 |
| (ii) வாடகை | 20,775,000 | 23,805,274 | 21,358,681 | 19,207,720 | 28,677,450 | 20,584,974 | 43,694,679 | 7,000,883 |
| (iii) அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,558,100 | 1,710,024 | 1,710,024 | - | 1,770,100 | 1,641,262 | 1,641,262 | - |
| (iv) ஏனைய வருமானம் | 29,246,336 | 39,694,842 | 39,694,842 | - | 26,038,275 | 24,076,822 | 24,076,822 | - |
| | 65,702,666 | 78,920,883 | 78,869,834 | 36,522,426 | 59,530,825 | 59,889,505 | 82,999,211 | 26,852,846 |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **வீதவரியும் வரியும்** | | |
| (அ) மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா 13,710,742 ஆன மொத்த வருமானத்தில் 47 சதவீதமான தொகையான ரூபா 6,436,248 திசெம்பர் 31 வரை அறவிடப்படாதிருந்தது. | வருமான நிலுவை தொகையை விரைவாக அறவிடுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக் அறியத் தருகின்றேன். | பட்டியலிடப்பட்ட வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 19,851,963 ஆன வீதவரி பாக்கியில் 54 சதவீத தொகையான ரூபா 10,788,091 ஐ மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | வருமான நிலுவை தொகையை விரைவாக அறவிடுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என தயவுடன் அறியத் தருகின்றேன். | பாக்கியாக காணப்படும் வீதவரி விரைவாக சேகரிக்கப்படல் வேண்டும். |
| (இ) 2016-2022 காலகட்டத்தில் சொத்துகளை குத்தகைக்கு வழங்கியதற்காக அறவிடப்பட வேண்டிய வருமானமான ரூபா 9,914,947 மீளாய்வாண்டில் அறவிப்பட்டிருக்கவில்லை | வருமான நிலுவை தொகையை விரைவாக அறவிடுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என தயவுடன் அறியத் தருகின்றேன் | பட்டியலிடப்பட்ட வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) **வாடகை**<br>மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய வருமானத்தில், 2023 திசெம்பர் 31 அன்று வரை ரூபா 4,006,523 அறவிடப்பட்டிருக்கவில்லை | கடைகளின் வாடகை செலுத்தாதவர்களிற்கு எதிராக வழக்கு தொடர்வதற்கும், நிலுவை வாடகைத் தொகையை கட்டம் கட்டமாக அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகின்றேன். | பட்டியலிடப்பட்ட வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டில் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 4,653,834 ஆன கடை வாடகை நிலுவையின் 35 சதவீத தொகையான ரூபா 1,619,214 மீளாய்வாண்டின் இறுதியில் சேகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | நிலுவை வாடகைத் தொகையை கட்டம் கட்டமாக அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகின்றேன். | வருமான நிலுவை விரைவில் சேகரிப்பட வேண்டும் |

<u>**ஏனைய வருமானங்கள்**</u>

| | | | |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட விளம்பரப் பலகை கணக்கெடுப்பின்படி, காட்சிப்படுத்தப்பட்ட 109 விளம்பர பலகைகளுக்காக 2023 திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டிய ரூ.345,900 பெறுமதியாக விளம்பரப் பலகைக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை அறவீடு தொடர்பில் உரிய தரப்பை அறிவுறுத்தியுள்ளதோடு அவற்றை செலுத்தாதவிடத்து விளம்பர பலகைகள் தொடர்பாக முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | விளம்பர பலகைகள் கட்டணங்கள் குறித்த ஆண்டில் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 அன்று நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,967,711 உம், முத்திரைக் கட்டணங்கள் ரூபா 29,068,930 உம் தொகை கிடைக்க வேண்டியிருந்தது | நிலுவைத் தொகையை அறவிடுவதற்காக நிறுவனங்களுக்கு எழுத்துப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளன | நிலுவைத் தொகையை விரைவாக அறவிட வேண்டும் |

## 2.3 <u>மிகை அறவீடு</u>

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட மிகை அறவீடுகள் தொடர்பில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 129,580 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | குறித்த தரப்பினர் தற்போது மரணித்துள்ளதுடன் அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக குறித்த தகவல்களை உள்ளூராட்சி மன்ற திணைக்களத்திற்கு அனுப்பியுள்ளமையை அறியத் தருகின்றேன். | மிகை அறவீட்டுத் தொகையை குறித்த காலத்தினுள் அறவீடு செய்ய வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தால் ஒதுக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றல்

பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ், பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் ஆகிய விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல் மற்றும் பொதுமக்கள் நலன், வசதிகள் மற்றும் நலனபுரி சேவைகள் போன்ற சபையால் ஆற்றப்பட வேண்டிய கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**உப உறுப்புரைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2022 நவம்பர் 18, ஆம் திகதிய 3122 ஆம் இலக்க வர்த்தமானி ஊடாக கழிவு சுத்திகரிப்புக்கான துணை விதிகளின் பிரகாரம் கழிவு சேகரிப்புக்கென சபை கட்டணம் வசூலிக்க வேண்டும் என்று கூறப்பட்ட போதிலும், 2023 ஆம் ஆண்டில் கழிவுகளுக்கு கட்டணம் வசூலிக்கப்பட வேண்டிய நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டு அதற்கான கட்டணம் வசூலிக்கப்படவில்லை. | தொடர்புடைய சட்ட விதிகளின்படி, அவர்கள் எதிர்காலத்தில் குப்பைக்கு கட்டணம் வசூலிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் | சட்ட விதிகளின்படி அதற்கான கட்டணங்கள் வசூலிக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | பிரதேச சபையினால் முன்னெடுக்கப்பட்டு வரும் நீர் விநியேகத்திட்டத்தின் கிழ் வழங்கப்பட்டிருக்கும் நீர் இணைப்புகளுக்கான நீர் மானிகளை பொருததாமை காரணமாக வீடுகளுக்கு கட்டணமாக ரூபா. 100 முதல் ரூபா. 250 வரையும் வணிக இடங்களிற்கு ரூ. 1,250 முதல் ரூ. 3,750 வரையும் மாதாந்தக் கட்டணம் அறவிட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | நீர் மானிகளைப் பொருத்துவதற்கான ஆரம்ப செலவை தற்பொழுது சபை தாங்குவது கடினம் என்பதாலும் பொது மக்களின் நல்வாழ்வுக்காக நீர் வழங்கப்படுவதாலும் எதிர்காலத்தில் மாகாணசபை நிலையான நிதி ஒதுக்கீட்டின் கீழ் 162 நீர் மானிகளைப் பொருத்துவதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. | குடிநீர் விநியோகத்தை முறையாக நிர்வகிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபைக்குச் சொந்தமான புதிய பேருந்து நிலையக் கடைகள் 01 மற்றும் 02 ஆகியவற்றின் குத்தகையின் போது முறையே 05 மற்றும் 04 தரப்பினர் விலைமனுக்களைச் சமர்ப்பித்திருந்தனர. கடை இலக்கம் 1 ற்காக முதல் 2 அதிக விலைமனுக்கள் ஒரு தரப்பினராலும் 3ம் 4ம் விலைமனுக்கள் மற்றொரு தரப்பினராலும் சமர்பிக்கப்பட்டிருந்ததோடு கடை இலக்கம் 02 தொடர்பான முதல் 03 விலைமனுக்களும் அதே தரப்பினரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. ஒரு தரப்பினர் ஒரே கடை அறைக்கு பலதடவை விலைமனுக்களை சமர்பிக்க முடியாது என்ற போதிலும் அதனைக் கருத்தில் கொள்ளாமல் கடை வளாகங்கள் குத்தகைக்கு விடப்பட்டிருந்தன | அந்த நிறுவனத்திற்கு நல்லெண்ண அடிப்படையிலேயே ஒப்பந்தம் வழங்கப்பட்டது | கொள்வனவுகள் வெளிப்படைத்தன்மையுடன் நடைபெற வேண்டும். |
| (இ) | 2016 முதல் 2020 வரை சமர்ப்பிக்கப்பட்ட அங்கீகரிக்கப்படாத 32 கட்டிட நிர்மாணத் திட்டங்கள் தொடர்பாக உள்ளூராட்சி மன்றம் கள ஆய்வுகளை மேற்கொண்டு மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முன்னெடுப்புகளை எடுக்கவில்லை. | கட்டட விண்ணப்பங்களில் உள்ள குறைபாடுகள் காரணமாக, அதற்கு அனுமதி அளிக்க முடியாமல் போனதுடன், தற்போது சமர்ப்பிக்கப்படும் கட்டட விண்ணப்பங்கள் குறித்து, தொடர்ந்தேர்ச்சியாக ஆராயும்படி உரிய உத்தியோகத்தர்களுக்குத் அறிவிக்கப்பட்டுள்ளது. | ஆளுகைப் குதியில மேற்கொள்ளப்படும் கட்டுமான பணிகளை அவதானிக்க வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சொத்துக்களை வருடாந்தம் குத்தகைக்கு விடும் பொழுது கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றப்பட வேண்டும் என்றாலும், பிரதேச சபைக்கு சொந்தமான இலக்கம் 03 மாட்டிறைச்சி கடையினை 2023 ஆம் ஆண்டிற்கான கொள்வனவு நடைமுறைகளை பின்பற்றாது 2022 ஆம் ஆண்டின் குத்தகைதாரருக்கே குத்தகைக்கு விட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பிரதேச சபையின் தீர்மானத்தின் பிரகாரம், பெரும்பான்மை உறுப்பினர்களின் உடன்பாட்டின் பேரில் விலைமனுக் கோரல் இன்றி குத்தகைக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | சபைக்கு சொந்தமான சொத்தை குத்தகைக்கு விடும்போது கொள்வனவு நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பிரதேச சபைக்கு சொந்தமான 03 சொத்துக்களின் குத்தகை ஒப்பந்தத்தின் விதிமுறைகளின்படி, மாதாந்த நீர் மற்றும் மின்சார கட்டணங்களை குத்தகைதாரர் செலுத்த வேண்டும் என்ற போதிலும் 03 சொத்துக்களின் நீர் கட்டணமான ரூ. 347,588 ஐ சபை செலுத்தியிருந்தது | குத்தகைதாரர் குறித்த தண்ணீர் இணைப்புகளை குத்தகைக்கு எடுத்தவர்கள் தவிர ஏனைய தரப்பிரும் பயன்படுத்துவதால் நீர் கட்டணத்தை செலுத்த முடியாது என குத்தகைதாரர் தெரிவித்ததையடுத்து, தலைவரின் எழுத்துப்பூர்வ உத்தரவின் பேரில் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதோடு, தற்போது புதிய தண்ணீர் மீட்டர்கள் பொருத்தப்பட்டு வருகிறன. | ஒப்பந்தத்தின் விதிமுறைகள் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (இ) | மொத்த விற்பனை சந்தையில் கடை அறைகள் இலக்கம் 7, 8, 9 மற்றும் 11 ஐ குத்தகைக்கு எடுத்த தரப்பினர் கடை அறைகளை வேறு தரப்பினருக்கு உரிமை மாற்ற ஒப்பந்தம் செய்திருந்த போதிலும் கடை அறைகளை உரிமை மாற்றுவது தொடர்பான எந்த நிபந்தனையும் குத்தகை ஒப்பந்தத்தில் சேர்க்கப்படவில்லை. | சபையின் அனுமதியின்றி வேறொரு தரப்பினருக்கு ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அதற்கான நிபந்தனைகளை உள்ளடக்கி எதிர்காலத்தில் புதிய உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டு மீள் ஒப்பந்தம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | கடை வளாகத்தை குத்தகைக்கு விடும்போது அது தொடர்பான அனைத்து நிபந்தனைகளும் குத்தகை ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------ | ------------------------------ | ----------- |
| (அ) | 2023 ஆம் ஆண்டிற்கென, உள்ளுராட்சி மன்றத்தினால் தகனச்சாலைக்கு ரூபா 31,683,745 செலவில் 185 எரிவாயு சிலிண்டர்கள் வாங்கப்பட்டிருந்த நிலையில் ஒரு சேமிப்பு அறையினூடாக குறித்த எரிவாயுவை விநியோகிப்பதற்கான எவ்வித வேலைத்திட்டமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | பாதுகாப்பான சேமிப்புக் கிடங்குகள் இல்லாமை, போக்குவரத்துச் சிக்கல்கள், விடுமுறை நாட்களில் எரிவாயு விநியோகிப்பதில் உள்ள சிக்கல்கள் காரணமாக சபையின் சேமிப்பகத்தின் மூலம் எரிவாயுவை வழங்காது தகனச்சாலையிலேயே சேமித்து வைத்துள்ள நிலையில், இனி வரும் காலங்களில் இந்தச் செயல்பாடுகளை முறையாக மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | சபைக்கு சொந்தமான சொத்துக்கள் வினைத்திறனாக நிர்வகிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தகனச்சாலையில் பராமரிக்கப்படும் பதிவேட்டின்படி, 2023 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி எஞ்சிய எரிவாயு (இருப்பு) முன்கொண்டுவரப்படவில்லை என்றபோதிலும் 2023 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 185 எரிவாயு சிலிண்டர்களில் 152.15 எரிவாயு சிலிண்டர்களே பயன்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி, திசெம்பர் 31, 2023 அன்று, 32.85 எரிவாயு சிலிண்டர்கள் மீதமாகக் காணப்பட வேண்டும். எனினும் அது 3.52 சிலிண்டர்கள் எனக் குறிப்பிடப்பட்டதன் காரணமாக, ரூபா. 509,912 பெறுமதியான 29.10 எரிவாயு சிலிண்டர்கள் பற்றாக்குறையாக காணப்பட்டது | கண்காணிப்பு அலுவலர்களினூடாக பதிவேடுகளை பரிசோதனை செய்த பொழுது குறித்த விடயத்தை பதிவு செய்யும்பொழுது ஏற்பட்ட தவறு காரணமாகவே அவ்வாறு காணப்பட்டதாகவும், மீதமுள்ள எரிவாயு அளவு சரியாக இருப்பதையும் கண்டறிந்தனர். | சபைக்கு சொந்தமான சொத்துக்களின் பயன்பாடு மற்றும் பாதுகாப்பு குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (இ) | தீயணைப்பு இயந்திரத்தின் மீற்றர் பதிவில் மொத்த பிரயாணத் தூரம் 65616 கிலோ மீற்றர் என பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், பதிவு புத்தகத்தில், அது 66325 கிலோ மீற்றர என பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் பிரயாணிக்காத 709 கிலோமீற்றர்களுக்காக 177 லீற்றர் எரிபொருள் பெறப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | இது தொடர்பாக வாகனத்திற்குப் பொறுப்பான சாரதியிடம் காரணங்கள் கேட்கப்பட்டு, எழுத்துப்பூர்வமாக பதிலளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. | சபைக்கு சொந்தமான சொத்துக்களின் பயன்பாடு முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | சபைக்குச் சொந்தமான டிரம் டிரக் வண்டியின் பதிவுச் சான்றிதழின் படி, வாகனத்தில் குறிப்பிடப்பட்ட சேசி இலக்கம் மாற்றமாக இருக்கின்றமை அவதானிக்கப்படதோடு 2019 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த வாகனத்திற்கான வருமான அனுமதிப்பத்திரம் பெறப்படவில்லை. | வாகனங்களை இறக்குமதி செய்வதில் ஈடுபட்ட நிறுவனத்தின அசமந்தமான செயற்பாட்டினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இந்த பிழையை சரி செய்தால் உரிய ஆவணங்களை சரி செய்ய முடியும் எனவும் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது. | சபைக்கு சொந்தமான சொத்துக்களின் உரிமை மற்றும் பாதுகாப்பு குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | சபையினால் பயன்படுத்தப்படும் 04 வாகனங்களின் சட்டப்பூர்வ உரித்து கையயேறகப்படவில்லை. | குறித்த வாகனங்களின் உரிமையினை சபையிற்குப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | சபைக்கு சொந்தமான சொத்துக்களின் சட்டப்பூர்வ உரிமை கையகப்படுத்தப்பட வேண்டும். |
| (ஊ) | சபைக்குச் சொந்தமான டிப்பர் வண்டி 2023 ஆம் ஆண்டு ஜுலை 7 ஆம் தேதி முதல் பழுதுபார்க்கும் பணிக்காக இயங்குவதை நிறுத்திய போதிலும் 2023 ஒக்டோபர் 18வரை பழுதுபார்க்கப்படவில்லை. தினசரி ஓட்டுநர் பதிவு புத்தகத்தின்படி, பழுதுபார்ப்புக்காக நிறுத்தப்பட்ட நாளில் வாகனத்தின் பிரயாண தூரம் 57885 கிலோ மீற்றர் ஆகக் காணப்பட்ட நிலையில் 2023 ஒக்டோபர் 18அன்று வாகனத்தின் பிரயாண தூரம் 63823 கிலோ மீற்றர் என பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனால், வாகனத்தின் தானியங்கு மானி வாசிப்பானது தினசரி பதிவு புத்தகத்தை விட 5938 கிலோ மீற்றர் அதிகமாகக் காணப்பட்டது. இதனால், உத்தியோகபூர்வ நடவடிக்கைகளுக்குப் புறம்பாக 5938 கிலோமீட்டர்கள மேலதிகமாக பயன்படுத்தப்பட்டிருப்பதனை அவதானிக்க முடிந்தது. | இது தொடர்பாக வாகனத்திற்குப் பொறுப்பான சாரதியிடம் விளக்கம் கோரப்பட்டுள்ள நிலையில் அதற்கான பதிலை சாரதியிடமிருந்து பெற்ற பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் | சபைக்கு சொந்தமான சொத்துக்களின் பயன்பாடு குறித்து போதுமான கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (எ) | மொனராகலை பொத்துவில் வீதியில் அமைந்துள்ள சபைக்கு சொந்தமான 03 பேர்ச்சஸ் காணி தனியார் ஆடை விற்பனை நிறுவனம் ஒன்றினால் பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில் அதந்கு எதிராக சபை எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வில்லை. | எதிர்காலத்தில் உரிய காணிகளை அளவீடு செய்து குறித்த விடயத்தை நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சபைக்கு சொந்தமான சொத்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். |

### 3.5 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொள்வனவு தீர்மானங்கள் மற்றும் கொள்வனவுத் தீர்மானத்தின் உரிய விலைகள் இன்றி, வெலியாய முன்பள்ளிக்குத் தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்தல், சபைக்குத் தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்தல், ஊழியர் சீருடை கொள்வனவு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகளுக்காக ரூபா. 395,393 செலுத்தப்பட்டிருந்தது. | சில ஆண்டுகளுக்கு முன் அந்த தனியார் நிறுவனத்திடமே தண்ணீர் மோட்டார் வாங்கியதால், பழுது பார்த்தல் தொடர்பான விலைமனுக் கோரல் இடம்பெறவில்லை என்பதோடு, கொள்வனவு தீர்மான இலக்கம் 85 தொடர்பான விலைமனுக் கோரல்கள் தவறொன்றின் காரணமாக தீர்மான இலக்கம் 94 கோப்பில் தவறுதலாக பதிவுசெய்யப்பட்டுள்ளது.எதிர்காலத் தில் குறித்த தவறுகளை தவிர்ப்பதற்கான முன்னெடுப்புகள் மேந்கொள்ளப்படும். | பெறுகை செயற்பாடுகள் முறையான மற்றும் வெளிப்படையான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | சுகாதாரத் துறைக்குத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதற்கு 2023 ஏப்ரல் 10 ம் திகதியிட்ட வவுச்சர் இலக்கம் 16 மூலம் ரூபா. 102,000 ஒரு தனியார் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்ததோடு 2023 கொள்வனவுத் தீர்மான இலக்கம் 40 இன் பிரகாரம் புறித்த கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த தீர்மானத்தின்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனத்திற்கு மாறாக மற்றொரு நிறுவகத்திலேயே கொள்வனவு செய்யப்பட்டிருந்ததோடு கொள்வனவு செய்த குறித்த நிறுவனத்திடமிருந்து குறைந்தபட்சம் விலைமனுவேனும் கோரப்படவில்லை. | குறைந்த விலைமனு சமர்ப்பித்த நிறுவனம் பொருட்களை வழங்காததால், அந்த விலையில் வேறு நிறுவனத்திடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டதோடு, அதற்காக விலைமனுக்கள் கோரப்பட்ட போதிலும், கொள்வனவு தீர்மானங்களைப் பதிவு செய்யும் பொழுது ஏற்பட்ட தவறு காரணமாக அது பதிவுசெய்யப்படவில்லை என்பதோடு எதிர்காலத்தில் இதுபோன்ற தவறுகளைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகை செயற்பாடுகள் முறையான மற்றும் வெளிப்படையான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பிரதேச சபை தீயணைப்பு வீரர்களின் சீருடை கொள்வனவிற்காக 2023 ஆம் ஆண்டில், ரூபா. 293,600 செலுத்தப்பட்டது. 2023ஆம் ஆண்டின் 63ஆம் இலக்க கொள்வனவுத்<br><br>தீர்மானத்தின் பிரகாரம் இந்தக் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட போதிலும், அந்த முடிவின்படி, உத்தியோகத்தர்களுக்கான பாதுகாப்புக் காலணி கொள்வனவுக்காக மாத்திரமே இது மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, சீருடைகள் வாங்குவதற்கான விலைமனுக்கள் கோரப்படவில்லை | ஒரு தொகுதி சீருடையின் விலை குறிப்பிடப்படாத காரணத்தால், அந்த நிறுவனத்திற்குரிய விலைப்பட்டியல் மூலம் விலை சமர்பிக்கப்பட்டதோடு, ஆரம்பத்தில் விலை குறிப்பிடப்படாத காரணத்தால், கொள்வனவுத் தீர்மான புத்தகத்தில் பதிவு செய்தல் தவறவிடப்பட்டுள்ளது. | பெறுகை செயற்பாடுகள் முறையான மற்றும் வெளிப்படையான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | மொனராகலை பிரதேச சபையினால் 15 வொட் பச்சை மின்குமிழ்கள் 1000 த்தினை கொள்வனவு செய்வதற்காகக் கோரப்பட்ட விலைமனுக்கோரலின் பின்னர், 03 வருட உத்தரவாத காலத்துடன் ஒரு மின்குமிழ் 1,535 ரூபாய் வீதம் வழங்க முன்வந்த நிறுவனத்திடம் கொள்வனவு செய்யயாது, 02 வருட உத்தரவாதக் காலத்துடன் ஒரு மின்குமிழ் 2,350 ரூபாய் வீதம் வழங்க முன்வந்த மற்றொரு நிறுவனத்திடம் கொள்வனவு செய்தமை காரணமாக சபையின் கணக்கிற்கு ரூபா 795,000 நட்டம் ஏற்பட்டிருந்தது. | மிகக்குறைந்த விலையில் விலைமனு சமர்ப்பித்த நிறுவனம் ஒரு மின்குமிழ் 1,535 ரூபாய் வீதம் வழங்கமுடியாது என தெரிவித் ததோடு அவ்வாறு அந்த விலையில் பெறவேண்டுமாயின் ஒரே நேரத்தில் 500 மின்குமிழ்களுக்கு மேல் கொள்வனவு செய்ய வேண்டும் எனவும் அறிவித்தது. விலைமனுக்களை சமர்பித்த ஏனைய நிறுவனம் 03 வருட உத்தரவாத காலத்துடன் ஒரு மின்குமிழை ரூபா. 2,350 ம் வழங்கவும், மின்குமிழ் ஒன்றை மாற்றுமிடத்து மின்குமிழ் இலக்கம் மற்றும் சிட்டை இலக்கம் என்பவற்றை கருத்திற்கொள்ளாது மாற்றிக் கொடுக்க உடனபட்டமையினால் அந் நிறுவனத்திடமிருந்து மின்குமிழ் கொள்வனவு செய்யப்பட்டுத | பெறுகை செயற்பாடுகள் முறையான மற்றும் வெளிப்படையான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.6 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 10 பதவிகளிற்கான 22 உத்தியோகத்தர்களிற்குறிய வெற்றிடங்களும், 04 பதவிகளிற்கான 09உத்தியோகத்தர்களின் மிகையும் காணப்பட்டது. | பதவியணியினர் பற்றாக்குறை தொடர்பாக உள்ளூராட்சி மன்ற திணைக்களத்திற்கு தெரியப்படுத்தியுள்ளதோடு மெலதிகமாகவுள்ள உத்தியோகத்தர்கள் சபையின் கோரிக்கைப் பிரகாரம் பணியமர்த்தப்பட்டவர்கள் அல்ல. | பதவியணி வெற்றிடங்களை நிரப்ப வேண்டும் என்பதோடு மேலதிக பணியாளர் பதவிகளுக்கான அங்கீகாரம் பெறப்பட வேண்டும் |

## 4. கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் பிரதேச சபையினால் தயாரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட ஆவணத்தின்படி, மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவுகள், வருடத்தின் உள்ளவறான வருமானம் மற்றும் செலவுகளுடன் ஒப்பிடுகையில், 08 வருமான தலைப்புகளில் 10 வீதத்திலிருந்து 37 வீதம் வரையும், 07 செலவின தலைப்புகளில் 1 வீதத்திலிருந்து 47 வீதம் வரையும் வித்தியாசம் காணப்பட்டது | சில சந்தர்ப்பங்களில் எடுக்கப்படுகின்ற நியாயமான தீர்மானங்கள் மற்றும் வருமான அறவீட்டு தந்திரோபாயங்கள் அடிப்படையில் மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கு ஈடாகும் வகையிலான தொகையை சேகரிக்க முடியவில்லை. | வருடாந்த பாதீடு மிகவும் நடைமுறை ரீதியில் தயாரிக்கப்பட வேண்டியதுடன் அந்த்இலக்குகள் நிறைவேற்றப்பட வேண்டும் |